Registered as a News Paper in Sri Lanka.

# தினக்கதிர்

THINAKKATHIR
දිනක්කතිර්

ஒளி - 01 - கதிர் - 180 09-10-2000 செவ்வாய்க்கிழமை பக்கங்கள் - 08 விலை - ரூபா 5/-


மதிப்பட்டு கொண்டிருக்கும் ஜனநாயகத்தின் மீட்சியின் தோழனாய்......
மட்டக்களப்பு மாவட்டத்தின்
பிரஜைகள் முன்னணி
வேட்பாளர்
பூ.வி.எம்.ஐ.றஹ்மதுல்லாஹ்

எனது இலக்கம் 7
குடும்பத்திற்கு ஒருவர் எனக்கு வாக்களியுங்கள்!
அசாத்தியம் என்பதை சாத்தியமாக்குவோம் !

# மட்டக்களப்பு தேசிய ஐக்கிய முன்னணிக்கு எதிரான ஆட்சேபனைமனு, நீதி மன்றம் நிராகரிப்பு !

(நமது நிருபர்)

**மட்டக்களப்பு மாவட்ட தேசிய ஐக்கிய முன்னணியின் வேட்பு மனுவை நிராகரிக்கக் கோரி தமிழீழ விடுதலை இயக்கம் சமர்ப்பித்திருந்த மனுவை மேல் முறையீட்டு நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.**

மட்டக்களப்பு மாவட்ட தேசிய ஐக்கிய முன்னணியின் வேட்பாளர்களான செல்லையா இராசதுரை சிவஞானம் அகிலேஸ்வரன் ஆகியோரின் கை ஒப்பங்கள் போலியானவை எனவே மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய ஐக்கிய முன்னணியின் வேட்புமனுவை நிராகரிக்கக்கோரி மட்டக்களப்பு மாவட்ட தமிழீழ விடுதலை இயக்க தலைமை வேட்பாளர் நித்தியானந்தன் இந்திரகுமார் உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இது தொடர்பான வழக்கு விசாரணை நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதிமன்ற நீதிபதி அசோக்கா சில்வா முன்னிலையில் நடைபெற்ற போதே இந்த தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதே வேளை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் அப்பீல் மனு தாக்கல் செய்யப்படவிருப்பதாக ரெலோ முதன்மை வேட்பாளர் இந்திரகுமார் நித்தியானந்தன் தெரித்துள்ளார்.

## திருமலையில் பாதுகாப்பு தீவிரம்

(திருமலை நிருபர்)

திருமலை நகரில் தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரபபடுத்தப்பட்டுள்ளது.

வாக்கு எண்ணும் நிலையமான பிறடிற் கோட்டைக்கான பிரதான பாதை மூடப்பட்டுள்ளது.

வாக்கு எண்ணும் நிலையத்திற்கு தேர்தல் உத்தியோகஸ்தர்கள் செல்

☞ 8ம் பக்கம் பார்க்க

## புலிகளுக்கு இரத்ததானம்.

(வவுனியா நிருபர்)

ஓயாத அலைகள் 4 நடவடிக்கை காரணமாக காயமடையும் புலிகளுக்கு அக்கராயன் பிரதேச மக்கள் தொடர்ச்சியாக இரத்ததானம் வளங்கி வருவதாக தெரியவருகிறது. சனியன்று பண்டாரியன் குளம் ஐயனார் புரம் மக்கள் இரத்ததானம்

☞ 8ம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் பாதுகாப்பு தீவிரம்

( வவுனியா நிருபர்)

வவுனியா நகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. புறநகர்பகுதிகள் நேற்று சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. வவுனியா அரச செயலகக் கட்டிட

☞ 8ம் பக்கம் பார்க்க

## நாகர் கோயில் புலிகள் தாக்குதல் யாழ் நகரம் வெறிச்சோட்டம

(வடமராட்சி நிருபர்)

யாழ் தென்மராட்சி நாகர் கோயில் படை நிலைகள் மீது நேற்று விடுதலைப்புலிகள் தொடர்ச்சியான ஆட்டிலறித் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். படையினர் பதில தாக்குதல்களை நடத்தியபோதிலும் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் பற்றி எதுவும் வெளியாகவில்லை.

இதேவேளை தென்மராட்சிப் பகுதியில் இருந்து 7821 பேர் இடம் பெயர்ந்து வடமராட்சியில் உள்ள

☞ 8ம் பக்கம் பார்க்க

## மக்கள கம, சின்னவத்தைக்கு ஹெலி மூலம் தேர்தல் பணிகள்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மங்களகம சின்னவத்தை ஆகிய இடங்களிலுள்ள வாக்குசாவடிகளுக்கு வாக்குப்பெட்டிகள் தேர்தல் கடமைக்கான ஊழியர்களை அழைத்துச் செல்லுதல் மற்றும் வாக்குப் பெட்டிகளை வாக்கு கணக்கெடுப்பு நிலையத் திறகு கொண்டு வருதல்

☞ 8ம் பக்கம் பார்க்க

## ஜெயலலிதாவுக்கு சிறைத்தண்டனை

(சென்னை -9 )



ஜான்சி நில ஊழல் வழக்கு தொடர்பாக தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இதற்கான தண்டனையை சிறப்பு நீதிமன்ற நீதிபதி அன்பழகன் வழங்கி உள்ளார். இவருடன் இவரது தோழி சசிகலா,

☞ 8ம் பக்கம் பார்க்க

## வாகரை வைத்திய சாலை மூடுவிழா பொதுமக்கள் பாதிப்பு !

(நமது நிருபர்)

வாகரை அரசினர் வைத்திய சாலை மூடப்பட்டுள்ளதால் பத்தாயிரத்தி ஐநூறுக்கு மேற்பட்ட மக்கள் வைத்திய வசதியின்றி பாதிக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக 35 கிலோ. மீற்றர் தொலைவிலுள்ள வாழைச்சேனை

☞ 8ம் பக்கம் பார்க்க

### தினக்கதிர் பந்திய பதிப்பு

- 11வது பாராளுமன்றத்துக்குத் தெரிவாகும் புதிய பிரதி நிதிகள் யார்?
- எந்தக்கட்சிக்கு பெரும்பான்மை ?
- ஆட்சி அமைப்பது யார் ?
- மட்டக்களப்பில் வெற்றி பெற்ற எம்.பிக்கள் யார் ?
- எந்தக்கட்சிக்கு அதிக ஆசனங்கள் ?

இவற்றை உடன் தெரிந்து கொள்வதற்கு 11.10.2000 புதன்கிழமை காலை வெளிவரும் தினக்கதிர் வாசியுங்கள்.

இதேதினம் நண்பகல் வெளிவரும் தினக்கதிர் பிந்திய பதிப்பு இதனையும் தவற விடாதீர்கள்!


சுயேச்சை குழு-1 இல்
மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்றத் தேர்தலில்
இரா. துரைரெட்ணம் (ரெட்ணம்) தலைமையில்
மீன் சின்னத்தில் போட்டி
3
சுயேச்சைக் குழு
(1)

பொய்யான வாக்குறுதிகளில் இருந்து எமது மண்ணைக் காப்பாற்றி
விடுதலை முன்னணி (EPRLF)

# தினக்கதிர்

07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055, 24821
பெ(F)க்ஸ் : 065 - 23055
E-mail :- tkathir@snet.lk


## எது நல்ல கொள்ளி?

இலங்கையின் பதினோராவது பாராளுமன்றத்துக்குப் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கான வாக்களிப்பு இன்று நடைபெறுகிறது.

ஆட்சி அதிகாரதிற்கு யாரைத் தெரிவு செய்வது எதிர்க்கட்சியிலிருந்து கூச்சல் போடுவதற்கு யாரை அனுப்புவது. பல கட்சிகள் சேர்ந்த கூட்டணி கட்சியா, ஒரு கட்சி ஆட்சியா?

இக்கட்சிகள் ஆட்சி அமைப்பதற்கு முண்டு கொடுக்கவும் பேரம் பேசவும் எந்தக் கட்சிகளை அல்லது குழுக்களைத் தெரிவு செய்வது?

இந்நாட்டின் ஒரு நாள் மன்னர்களான வாக்காளப் பெருமக்கள் இன்று மேற்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டும்.

ஆளும் கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணி மீண்டும் ஆட்சிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மைப் பலம் கிடைக்காவிடில் பாராளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றி ஒரு மேலதிக வாக்குடனாவது புதிய அரசியலமைப்பை சட்டமாக்குவேன் என்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா தமது இறுதி தேர்தல் பிரசாரத்தில் தனியார் தொலைக்காட்சி மூலம் உறுதியளித்திருக்கிறார். இதே சமயம் இன பேதமற்ற புதிய அரசியல் கலாசாரமொன்றை உருவாக்கப் போவதாக சந்திரிக்கா அரசின் நீதி அரசியல் யாப்பு இன விவகார தேசிய நல்லிணக்க அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் உறுதியளித்திருக்கிறார்.

நாட்டின் பிரதம மந்திரி இரத்தினசிறி விக்கிரம நாயக்கா இறுதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் புதிய அரசியல் கலாசாரத்தை அறிமுகப்படுத்தவே இம்மாதம் பதினெட்டாம் தேசிய பாராளுமன்றத்தைக் கூட்டுவதாகவும் அரசாங்கத்தின் முக்கிய நோக்கம் சமாதானமான சமுதாயத்தை உருவாக்கி சகல இனமக்களும் இன, மத பேதங்களை மறந்து ஐக்கியமாக வாழ வழியமைப்பதேயாகுமென்றும் கூறியிருக்கிறார்.

இதே பேச்சில் இதே பிரதமர் இரத்தினசிறி விக்கிரமநாயக்கா தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த யுத்தத்தை எவ்வாறேனும் நாம் வெற்றிக் கொள்வோம் என்றும் சூளுரைத்திருக்கிறார். எமது அரசாங்கம் யுத்தத்தை நடத்தி பயங்கரவாதத்தை ஒழிப்பதையே ஒரே குறிக்கோளாகக் கொண்டிருக்கிறதென்றும் அவர் கூறியிருக்கிறார்.

சந்திரிக்காவின் சமாதானத்துக்கான போர் என்பதைப் போல புதிய கலாசாரம் என்று பிரதமரும் முக்கிய அமைச்சரும் கூறுவதும் யுத்த கலாசாரமாகத்தானிருக்க வேண்டும்.

ஜனநாயகத்தைப் பேணிக்காப்பாற்றுவதற்காகப் பொதுத்தேர்தல் நடைபெறும் சமயத்தில் கூட தமிழ் மக்களும் தமிழ் வாக்காளர்களும் எப்படி அழிந்தாலென்ன எக்கேடு கெட்டாலென்ன என்று யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தி வரும் அரசும் அமைச்சர்களும் தேர்தல் முடிந்த பின் போரை நிறுத்துவார்களா? தமிழ் மக்களைப் பற்றிக் கவலைப்படுவார்களா?

புதிய அரசியல் யாப்பை நிறைவேற்றப் போவதாக சந்திரிகா கூறுகிறார். அரசியல் யாப்பில் மேலும் திருத்தம் கொண்டு வரப்போவதாக பிரதமர் விக்கிரமநாயகா சில தினங்களுக்கு முன் கூறியிருந்தார்.

சந்திரிகா சொல்லும் இந்த அரசியலமைப்பை எதிர்த்து பேரினவாதிகள் மட்டுமல்ல ஆன்மீகத்துறவிகளான பௌத்த பிக்குகள் போர்க்கொடி உயர்த்தியதும் ஒரு பிக்கு கொழும்பில் அரசமரத்தின் கீழ் சாகும் வரை உண்ணாவிரதமிருந்து அரசியலமைப்பு விவாதத்தை பாராளுமன்றம் கைவிடச்செய்தது மட்டுமல்ல பாராளுமன்றத்தையே கலைக்கவும் வழிவகுத்தார்.

மீண்டும் ஆளும் கட்சி ஆட்சிக்கு வந்தால் சந்திரிகா புதிய அரசியலமைப்பைக் கொண்டு வந்து நிறைவேற்ற முடியுமா? பௌத்த பிக்குகளும் பேரினவாதிகளும் விடுவார்களா? இவர்களை மீறி சந்திரிகாவால் எதையும் செய்ய முடியுமா? ஈழத்தமிழ் மக்களின் பாதுகாப்புக்கோ, கௌரவத்துக்கோ, சுயநிர்ணய உரிமைக்கோ எந்த உத்தரவாதமும் இல்லாத அற்ப சலுகைகளைக் கொண்ட இந்த அரசியலமைப்புக்கே இவ்வளவு எதிர்ப்பு!

விடுதலைப்புலிகளையும் தலைவர் பிரபாகரனையும் நாகரிகமற்ற முறையில் ஆளும் கட்சியை சேர்ந்தவர்கள் ஆளாளுக்கு வாய்க்கு வந்தபடி திட்டித் தீர்த்து புலிகளுக்கும் ரணில்விக்கிரமசிங்காவுக்கும் முடிச்சுப்போட்டு பிரசாரம் செய்த பின் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற பழைய பல்லவியை கடைசி நேரத்திலும் பாடவில்லை.

ஆட்சி அதிகாரத்துக்குப் போட்டியிடும் இன்றைய எதிர்கட்சித்தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தேர்தலின் பின் அரசுஅமைத்தவுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வுக் காணப்போவதாகவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுக் காண்பதில் நோர்வேயின் உதவியைநாடப்போவதாகவும் தெரிவித்திருக்கிறார்.நோர்வேயின் உதவியை நாடப்போவதாகத் தெரிவித்திருப்பது சிறிது நம்பிக்கை தருவதாக இருக்கிறது.

ஆனாலும் ஆட்சி அதிகாரத்துக்கும் போட்டியிடும் இந்த இரு பெரும் கட்சிகளும் இதே ஒற்றையாட்சி அமைப்பில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுக்காண முடியுமென்று கூறுவது நடக்க கூடியது மட்டுமல்ல நம்பவும் முடியாதது.

பெரும்பான்மை ஜனநாயக அமைப்பில் ஜனநாயக அமைப்பில் சிறுபான்மைப் பிரதிநிதிகள் ஆட்சிக்கு வருபவர்களுக்கு முண்டு கொடுத்து அற்ப சலுகைகளைப் பெறலாம். ஆனால் உரிமைகளை வென்றெடுக்க முடியாது

இந்த இரு கட்சிகள் மட்டுமல்ல இலங்கையின் ஒற்றையாட்சி அமைப்பை மகாசங்கத்தையும் மீறிமாற்றியமைக்க யார் முன்வருகிறார்களோ அவர்களே நாட்டில் நிரந்தர அமைதியைக் கொண்டு வர முடியும்.அது இந்தத் தேர்தலில் நடக்க முடியாது! இன்றைய நிலையில் எறிகிற கொள்ளியில் எது நல்ல கொள்ளி என்பதே கேள்வி!

## ஜூபிலி விழாக்கண்ட அசிசியார் ஆலயம்



உலகளாவிய ரீதியிலே பல்லாயிரக்கணக்கான ஆலயங்களையும், இலங்கையின் ஏனைய மாவட்டங்களிலே ஆறு ஆலயங்களையும் நம் மீன்பாடும் தேனாடாம் கிழக்கிலங்கையிலே ஒரேயொரு ஆலயத்தையும் தம் பெயரால் கொண்டு விளங்கும், சிறந்தவர் தான் புனிதரும், இரண்டாம் கிறிஸ்து என்னும் நாமம் பூணப்பட்ட வரும், கிறிஸ்துவின்ஐந்து திருக்காயங்களைத் தம் உடலில் அற்புதமாக ஏற்று வாழ்ந்தவருமான சிறந்த மாமுனிவர் தான் புனித பிரான்சிஸ்கு அசிசியார்.

இவரதுஆலயம், மட்டக்களப்பில் உள்ள குருக்கள் மடம் என்னும்கிராமத்திலே அம்மக்களினதும்சுற்றுப்புற மக்களினதும் உதவி ஒத்தாசை யுடனும் நலன் விரும்பிகள், உபகாரிகள், பெருந்தன்மையுடைய பெரியா ரின் கைக்கொடுத்தலினாலும், திருவாளர் க.அருளப்பு ஆசிரியரால்1961ம் ஆண்டு ஆயரதும்பல குருக்களதும் ஒத்துழைப்புடன் தொடங்கப்பட்டது. இதன் வெள்ளி விழா1986ம்ஆண்டு கொண்டாடப்பட்டது. இந்த நடப்பாண்டிலே இவ்வாலயத்திற்கு வயது 39 ஆகிறது.

பிரான்சிஸ்கன் சபைத் துறவிகள்இவ்வாலயம் வரவேற்றுள்ளது. இவர்களால் கிறிஸ்தவ, இந்து மக்கள் பல நன்மைகளை அடைந்ததோடு இச்சூழலையே ஒரு பெரிய ஆச்சரியமான இடமாக புனித பிரான்சிஸ்கு் மாற்றியுள்ளார் அனாத் தங்களால், கொடிய யுத்தத்தால் அராஜகத்தினால், சிக்குண்டும் மடிந்தும் மடியாமல் சிறையிலும், அங்கவீனர்களாக, நடைப் பிணங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும், கிழக்கிலங்கை அன்னையின் மக்களுக்கு, அநாதரவாக விடப்பட்ட சிறுவர்களுக்கு, இன மத பேதமின்றிப் புகலிடம் கொடுத்து, பராமரித்து, கல்வி, கேள்வி, ஆற்றல், திறமைகளையும் கொடுத்தும் வளர்த்தும் வருகின்றார் இப்புனிதர்.

இவரதுவருடாந்த திருவிழா. கத்தோலிக்கரின் மாபெரும் 2000ம் ஆண்டு, கிறிஸ்து பிறப்பின் ஜூபிலிவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. கிறிஸ்து வின் 2000ம் ஆண்டு ஜூபிலி என்றால், அதில் இரண்டாம் கிறிஸ்து என்று அழைக்கப்படும் புனித பிரான்சிசுக்கும் புகழும். மகிமையும் உண்டாகின்றது. 29-09-2000இல் திருவிழாக்கொடிஏறியது. தொடர்ந்து ஒன்பதுநாட்களும், சிறப்பு நவநாட் சிந்தனை களும்மறை உரைகளும், திருப்பலிகளும், ஆற்றப்பட்டு, 08-09-2000ம் ஆண்டு காலை 8.00 மணிக்கு அதி மதிப்பிற்குரிய ஆயர் கிங்ஸிலி சுவாம்பிள்ளை அவர்களால். திரு விழாப்பலி பூசை, சிறப்பு ஜூபிலித் திருப்பலியாக நிறைவேற்றப்பட்டது. உறுதிப் பூசுதல் அருட்சாதனமும் ஆயர்களால் வழங்கப்பட்டது. புனிதரின் அசீருடன். யாத்திரிகட்கு விசேட அன்னதானமும் வழங்கப்பட்டு திருவிழா இனிதே நிறைவுற்றது.

அருட்.சகோ.ஞா.மரியநாதன்

## ஏறாவூர் வீரபத்திரர் ஆலய வருடாந்த உற்சவம்

(போல் சந்திரசேகர்)

ஏறாவூர் 5ம் குறிச்சியில் கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மதுமலர்க்கா வீரபத்திர சுவாமிஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 3ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 13ஆம் திகதி அன்று தீர்த்த உற்சவத்துடன்இனிதே நிறைவு பெறும்.இந்தஉற்சவ காலங் களில் நடை பெறும் திருவிழாக்கள் மிகவும் சிறப்பான முறையில் கோலாகலமாக இடம் பெறும்.

ஆலயத்திருவிழாவுடன் ஆரம்பமாகி முறையே நாவிதன் குடி. பெரிய தம்பிரான் ஆலய மக்கள் சச்சிலா குடி. பெத்தான் குடி. படையாண்டகுடி, காலிங்குடி. உலகிப் போடி மக்கள் வேளார் குடி,ஆகியமக்களால் திருவிழாக்கள் நடாத்தப்படும்.12ஆம்திகதி வியாழக் கிழமை இரவு தீமிதிப்பு வைபவம் இடம் பெறும். 13ம் திகதி வெள்ளிக்கிழமைதீர்த்த உற்சவத்திற்காக எம்பெருமான் அதிகாலை 5மணிக்கு சவுக்கடி கடற்கரைக்குச்சென்று தீர்த்தமாடும் சிறப்பு நிகழ்ச்சியும் இடம் பெறும். என கோவில் நிர்வாக சபையினர் தெரிவிக்கின்றனர்.

## இன்று ஒரு சேதி சொல்வோம்.....!

இன்று பெண்கள் எழுச்சி தினமாகும் அதனை முன்னிட்டு இக்கவிதை பிரசுரமாகிறது

பெண்ணே.....!
வழமை போல்
இன்றும்
உனக்கான தினம்
பெண்கள் எழுச்சித்
தினமாகக்
கொண்டாடப்படுகிறது.
ஆனால்
நீ மட்டும் எங்கோ
ஒரு மூலையில்

❖❖❖❖❖

அடுக்களையில்
உட்கார்ந்து
புல்லாங்குழல் வாசிக்க
முடியுமா?
வெறும் அடுப்பு மட்டுமே
ஊத முடியும்.....!

❖❖❖❖❖

களத்தில்
எம் பெண்ணினம்
சரித்திரம் படைக்க
இங்கு -
ஒரு புறத்தில்
எம்மினம்
கண்ணீர் வடிக்கின்றது.

❖❖❖❖❖

தாலி
என்றதும்
வேலி
என்றதும்
இங்கு
வெறும் கட்டுக் கதைகளாகின
தாலி என்ற வேலிபோட

கூலியாய்
கட்டுக் கட்டாய் பணம்
இதற்கு "சீதனம்"
என்றொரு பேர்!

❖❖❖❖❖

மதுரையை
எரித்தாள்
கண்ணகி என்றனர்
கோயில் கட்டினர்-



ஆனால் இங்கே
ஆயிரம் ஆயிரம்
கண்ணகிகள்
தினம் தினம்
எரிக்கப்படும்
செய்தி தெரியுமா உனக்கு?

❖❖❖❖❖

கலாசாரம்
பண்பாடு
விழுமியம்
என்ற பெயரில்
பெண்ணே
உன்
சின்னச்சின்ன
ஆசைகளுக்கும்
பெரிய பெரிய பூட்டுக்கள்

❖❖❖❖❖

ஆணும் பெண்ணும்
சமமே....
இது அர்த்த நாரீஸ்வரர் வேடம்
ஆனால்
எம் சமுதாயமெங்கும்
ஆணுக்கு கீழே
பெண் -
இதுவே உண்மையான கோஷம்

❖❖❖❖❖

கரண்டி பிடித்த கைகள் இன்று
கண்ணி வெடி புதைக்க
காலம் மாறுகிறது
நாளை ஒரு
சேதி சொல்வோம்
ஆணும்
பெண்ணும்
சமனாக
அகிலமெங்கும் ஒரு புதிய
விடியல் -
அதுவே பெண்களுக்கான
உண்மை விடியல்!

மைதிலி

# தமிழ்நாட்டில் மேட்டூர் அணை நிரம்பியது. காவிரியில் வெள்ளம்


(மேட்டூர்)

தமிழ்நாட்டில் மிகப்பெரிய அணையான மேட்டூர் அணை சேலம் மாவட்டத்தில் உள்ளது. இந்த அணையில் -93.5டி.எம்.சி.(120அடி) தண்ணீர் தேக்கி வைக்க முடியும். இதன் மூலம் திருச்சி, தஞ்சை, நாகை, திருவாரூர், ஈரோடு, நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் கர்நாடக மாநிலத்தில் உள்ள ஹேமாவதி, கிபிணி, கிருஷ்ண ராஜாசாகர் ஆகிய அணைகள் நிரம்பியது. இதன் உபரி நீர் திறந்து விடப்பட்டதால் இந்த தண்ணீர் மேட்டூர் அணைக்கு வருகிறது. இப்பொது அணையின் நீர் மட்டம் 120 அடியை தாண்டி விட்டது.


தற்போது வடகிழக்கு பருவ மழை ஆரம்பிக்க இருப்பதால் தொடர்ந்து அணை நிரம்பி இருக்க வாய்ப்பு உள்ளது. காவிரியில் வெள்ளம் அதிகமாக வருவதால் காவிரி கரையோரம் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடத்திற்கு செல்லும் படி கண்காணிப்பு பொறியியலாளர் சிவப்பிரகாசம் நிருபர்களிடம் கூறினார்.

அணை நிரம்பிவிட்டதால் உபரி நீர் அணையின் கிழக்குப் பகுதியிலுள்ள 16 கண் பாலத்தில் திறந்து விடப்பட்டது.. அந்த உபரி நீர் மீண்டும் காவிரியில் கலக்கிறது. மேட்டூர் அணைக்கு வரும் தண்ணீர் முழுவதும் திறந்து விடப்படுவதால் காவிரியில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிய வருகிறது!

மேட்டூர் அணையானது கட்டப்பட்ட நாளில் இருந்து 120 அடியை 3 முறை தாண்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



**காவிரீ பாசனத்தின் உயிர் நாடியான புகழ்பெற்ற மேட்டூர் அணை நேற்று தனது முழு கொள்ளளவை (120 அடி) எட்டிய போது கடல்போல காட்சியளித்தது.**



**மேரூர் அணை நிரம்பி விட்டதால் அணையில் இருந்து 27 ஆயிரம் கன அடி தண்ணீர் (நேற்று) திறந்து விடப்பட்டுள்ளது. அணையில் இருந்து நீர் வெளியேறும் ரம்மியமான காட்சியை இங்கெ படத்தில் காணலராம்**

## உலக வலம்

தொகுப்பு :- பௌஸி

## நவாஸ்செரிப்பின் தாயார் மீது நில ஊழல் வழக்கு!

(ராவிப்பிண்டி)

பாக்கிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் சொரிபின் தாயார் மீது நில ஊழல் வழக்கை மீது ஊழல் வழக்கை இராணுவ ஆட்சி தொடர்ந்துள்ளது. லாகூர் அருகேயுள்ள ராய்வென்ற் என்ற இடத்தில் நவாஸ்செரியின் குடும்பத்திற்கு சொந்தமான பங்களாக்கள் உள்ளன. இதற்கான நிலத்தை வற்புறுத்தி சட்ட விரோதமாக அபகரித்ததாக நவாஸ் செரிப்பின் தாயார் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. பிரதமர் நவாஸ்செரிப் பெயரில் வாங்கி அரச செலவில் செம்மைப்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த நிலத்தில் குடும்பத்தினராக ஐந்து ஆடம்பர பங்களாக்களை கட்டி அதற்கு தங்கள் சொந்தக் கிராமத்தின் பெயரான "யாட்சி உம்ரா" என பெயரிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நக்கீரன் கோபால் மீண்டும் காட்டுக்கு வெறுங்கையுடன் திரும்ப மாட்டாராம் !

(சென்னை)

கன்னட நடிகர் ராஜ்குமார் மற்றும் 3 பேரை வீரப்பன் பிடியில் இருந்து மீட்பதற்காக 4 வது தடவையாக காட்டுக்குள் சென்ற நக்கீரன் கோபால், கடந்த 30 ந்தேதி பணயக்கைதிகளில் ஒருவரான நாகப்பா தப்பியதை தொடர்ந்து வெறும் கையுடன் திரும்பி விட்டார் அல்லவா?

இதையடுத்து கர்நாடக, தமிழக அரசுகள் 5-வது முயற்சியாக நக்கீரன் கோபாலை காட்டுக்குள் அனுப்ப தீர்மானித்தன. அதன்படி நேற்று கோபால் காட்டுக்குள் புறப்படதயாரானார்.

இதுகுறித்து நக்கீரன் இணையாசிரியர் காமராஜ் நேற்று இரவுகூறியதாவது:-

ராஜ்குமார் மற்றும் இருவரை மீட்கும் 5-வது முயற்சிக் காக கோபால் காட்டுக்குள் செல்ல எல்லா ஏற்பாடுகளுடனும் தயாராக உள்ளார். ஆனால் வீரப்பனிடம் இருந்து இன்னும் சிக்னல் கிடைக்கவில்லை. சிக்னல் கிடைத்ததும் அவர் புறப்பட்டு விடுவார். இன்று (நேற்று) இரவு புறப்படுவதற்கான சாத்தியக் கூறு குறைவாகவே உள்ளது. கோபால் ஏற்கனவே ஈரோடுக்கு சென்று விட்டதாகவும், அங்கு வீரப்பன் சிக்னலுக்காக காத்திருப்பதாகவும் கூறுவது தவறு. அவர் சென்னையில் தான் இருக்கிறார்.

ராஜ்குமாரை மீட்க கோபால் மேற்கொள்ளும் கடைசி முயற்சியாக இது இருக்கும். இந்த தடவை அவர் வெறுங்கையுடன் திரும்பமாட்டார். பணயக் கைதிகள் உடனடியாக விடுவிக்கப்படாவிட்டால், அவர்களை விடுவிக்கும் வரை காட்டிலேயே தங்கி விடுவார் என்றும் கூறினார்.

# டயானா மகனுக்கு வலை வீசும் பெண்கள்

இங்கிலாந்து இளவரசர் சார்லஸ்-டயானா தம்பதிகளின் மூத்த மகன் வில்லியம் 18 வயதான வில்லியம் பார்க்க அழகாக இருப்பார். இளங்கலை பட்டப்படிப்பை முடித்து விட்ட அவர் தற்போது ஓராண்டு ஓய்வில் உள்ளார். ஸ்காட்லாந்தில் உள்ள பழம் பெறும் பல்கலைக்கழகமான ஆண்ரூஸ் பல்கலைக்கழகத்தில் வில்லியம் முதுகலை பட்டப்படிப்பில் சேர இடம் கிடைத்து உள்ளது. 4 ஆண்டு படிப்பை அடுத்த ஆண்டு அவர் தொடங்குகிறார்.



இளம் பெண்களின் கனவு காதல் மன்னனாக வில்லியம் திகழ்கிறார். அவர் செல்லும் இடம் எல்லாம் டீனேஜ் பெண்கள் பட்டாளம் பின் தொடர்ந்து போகிறது. 2000 ஆண்டில் பெண்கள் சந்திக்க விரும்பும், ஆண் மகன வில்லியம்தான் என்று 'டாட்லர்' என்ற சஞ்சிகை கருத்து கணிப்பு வெளியிட்டு உள்ளது. வில்லியம் பக்கத்தில் உட்கார வாய்ப்பு கிடைக்காதா என்ற நப்பாசையில் அமெரிக்க பெண்கள் கூட ஆண்ட்ரூஸ் பல்கலைக் கழகத்தில் இடம் தேடி ஒரு வருகிறார் களாம்

# இந்தியா வாங்கும் ரஷ்ய ஆயுதங்கள்

(புதுடில்லி)

ரஷ்ய ஜனாதிபதி நான்கு நாள் இந்திய விஜயத்தின் போது இரண்டு பில்லியன், பவுன்ஸ் பெறுமதியான யுத்த தளபாடங்களை ரஷ்யாவிடம் இருந்து பெறுவதற்கான ஒப்பந்தத்தில் இந்தியா கைச்சாத்திட்டுள்ளது. இதன் மூலம் டாங்கிகளையும் ஓர் விமானம் தாங்கிக் கப்பலையும் அதோடு அதி நவீன விமானங்களையும் இந்தியா ரஷ்யாவிடமிருந்து பெற்றுக் கொள்ளும் இந்த ஒப்பந்தம் கடந்த புதன் கிழமையன்று கைச்சாத்திடப்பட்டது.

இந்தியா சுதந்திரமடைந்த நாளில் இருந்த மூன்று யுத்தங்களை நடத்தியுள்ளது. அதில் கடந்த 11 கிழமைகளுக்கு முன் நடந்த எல்லைப்போரும் அடங்கும்.

பாகிஸ்தான் ரீ-80 ரக டாங்கிகளை உத்ரேஸஸனிடம் இருந்து பெற்று கடந்த எல்லைப் போரில் பயன்படுத்தியது. இதனை எதிர்கொள்வதற்காகவே இந்தியா ரீ-90 ரக டாங்கிகள் ரஷ்யாவிடம் இருந்தும் கொள்வனவு செய்யவுள்ளது.




* வடக்கு கிழக்கு இணைந்த தாயகத்தை வலியுறுத்த
* அவசரகால சட்ட நீடிப்புக்கு எதிராக வாக்களிக்க
* "புலி" களுடன் பேசி பொது இணக்கத்துக்கு வருமாறு அரசை வலியுறுத்த



பிரசன்னா - 4 சாந்தன் - 5

வெளிச்சவீட்டு சின்னத்திற்கு வாக்களியுங்கள்



X 4 5

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மட்டக்களப்பு மாவட்டம்



ஈழத் தமிழர்களின் உணர்வுகளை தட்டியெழுப்பும் அருந்தமிழ் மைந்தன் **கா. தாமலிங்கம்** அவர்களுக்கு எமது பூரண ஆதரவை அளிப்போம்.



X 3





X 5

**சமாதானத்தின் பெயரால் உரிமை சாகடிக்கப்படக்கூடாது. உரிமையின் பெயரால் சமாதானம் வாழவைக்கப்பட வேண்டும்.**

பசீர் சேகுதாவூத் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் தேசிய ஐக்கிய முன்னணி

## மட்டக்களப்பு மாவட்டம்
## பாராளுமன்ற பொதுத் தேர்தல் 10 - 10 - 2000
# போட்டியிடும் கட்சிகள், வேட்பாளர்கள், வாக்குகள்
# யார்... ? எவர்... ? எந்தக் கட்சி... ? – அட்டவணை

| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வீணை | தபால் மூலம் வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | மொத்த வாக்குகள் |
|---|---|---|---|
| 1. அழகையா ராஜமாணிக்கம் | ................ | ................ | ................ |
| 2. ஏரம்பமூர்த்தி பரணிதரன் | ................ | ................ | ................ |
| 3. தம்பிப்பிள்ளை சிவானந்தராஜா | ................ | ................ | ................ |
| 4. பெரியதம்பி வீரசிங்கம் | ................ | ................ | ................ |
| 5 ராகவன் சுபாஸ் சந்திரபோஸ் | ................ | ................ | ................ |
| 6. ராஜநாதன் பிரபாகரன் | ................ | ................ | ................ |
| 7. செல்லத்துரை தங்கராசா | ................ | ................ | ................ |
| 8. செல்லையா செல்வராஜா | ................ | ................ | ................ |

| தேசிய ஐக்கிய முன்னணி மரம் | தபால் மூலம் வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | மொத்த வாக்குகள் |
|---|---|---|---|
| 1. அதிகாரி முதியன்சேலாகே தயானந்த | ................ | ................ | ................ |
| 2. அப்துல் காதர். எம். வி. எம். | ................ | ................ | ................ |
| 3. ஆலிம் முகமட் ஹிஸ்புல்லா | ................ | ................ | ................ |
| 4. நற்குணராஜா. ஜே. | ................ | ................ | ................ |
| 5. பசீர் சேகுதாவூத் | ................ | ................ | ................ |
| 6. விநாயகமூர்த்தி. கே. | ................ | ................ | ................ |
| 7. சிவஞானம் அகிலேஸ்வரன் | ................ | ................ | ................ |
| 8. செல்லையா இராஜதுரை | ................ | ................ | ................ |

| ஐக்கிய தேசியக் கட்சி யானை | தபால் மூலம் வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | மொத்த வாக்குகள் |
|---|---|---|---|
| 1. 'அப்துல் மர்சூக் உமர்லெவ்பை | ................ | ................ | ................ |
| 2. அரசரெட்ணம் சசிதரன் | ................ | ................ | ................ |
| 3. அலிசாகிர் மௌலானா செய்யது | ................ | ................ | ................ |
| 4. கணபதிப்பிள்ளை சிறிராம் | ................ | ................ | ................ |
| 5. காசுபதி பூபாலரெட்ணம் | ................ | ................ | ................ |
| 6. தம்பிராசா ஜெயக்குமார் | ................ | ................ | ................ |
| 7. பேரின்பராஜா சத்தியமூர்த்தி ராஜன் | ................ | ................ | ................ |
| 8. சித்திரப்போடி மாமாங்கராஜா | ................ | ................ | ................ |

| தமிழ் ஈழ விடுலை இயக்கம் வெளிச்ச வீடு | தபால் மூலம் வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | மொத்த வாக்குகள் |
|---|---|---|---|
| 1. இராசையா சீனித்தம்பி | ................ | ................ | ................ |
| 2. கண்ணா பனிக்கன் விநாயகமூர்த்தி | ................ | ................ | ................ |
| 3. நடராஜா சுந்தரலிங்கம் | ................ | ................ | ................ |
| 4. நித்தியானந்தம் இந்திரகுமார் | ................ | ................ | ................ |
| 5. பாலகிருஷ்ணன் கிருஷ்ணகுமார் | ................ | ................ | ................ |
| 6. ராகுவத்தே கங்கானங்கே லீலசேன | ................ | ................ | ................ |
| 7. சாமித்தம்பி சுந்தரலிங்கம் | ................ | ................ | ................ |
| 8. சீனித்தம்பி ரஞ்சன் | ................ | ................ | ................ |

| மக்கள் விடுதலை முன்னணி மணி | தபால் மூலம் வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | மொத்த வாக்குகள் |
|---|---|---|---|
| 1. அப்துல் ஹமீட் மரிக்கார் ஹப்பார் | ................ | ................ | ................ |
| 2. அப்துல் ஹமீட் முஹமட் இட்றீஸ் | ................ | ................ | ................ |
| 3. ஏக்கநாயக்க முதியன்சேலாகே உ க்குபண்டா | ................ | ................ | ................ |
| 4. கிட்ணன் செல்வராஜ் | ................ | ................ | ................ |
| 5. ராமசாமி வலகநாதன் | ................ | ................ | ................ |
| 6. ராசிக் மொஹமட் றியாஸ் | ................ | ................ | ................ |
| 7. சிறாஜீதீன் மொகமட் நப்லி | ................ | ................ | ................ |
| 8. சுப்பிரமணியம் கோவிந்தராஜா | ................ | ................ | ................ |

| தமிழர் விடுலை கூட்டணி சூரியன் | தபால் மூலம் வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | மொத்த வாக்குகள் |
|---|---|---|---|
| 1. அல்போன்ஸ் மேரி | ................ | ................ | ................ |
| 2. அழகு சுப்பிரமணியம் சத்தியநாதன் | ................ | ................ | ................ |
| 3. அஷ்லி நிமலநாயகம் சவுந்தரநாயகம் | ................ | ................ | ................ |
| 4. இளையதம்பி சோமசுந்தரம் | ................ | ................ | ................ |
| 5. பொன்னம்பலம் செல்வராசா | ................ | ................ | ................ |
| 6. மயில்வாகனம் விமலேஸ்வரன் | ................ | ................ | ................ |
| 7. மாணிக்கவாசகம் உதயகுமார் | ................ | ................ | ................ |
| 8. யோசப் பரராஜசிங்கம் | ................ | ................ | ................ |

| பிரஜைகள் முன்னணி பஸ் | தபால் மூலம் வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | மொத்த வாக்குகள் |
|---|---|---|---|
| 1. அலன் றீட்டா ஜோசப் | ................ | ................ | ................ |
| 2. கணபதிப்பிள்ளை தங்கையா | ................ | ................ | ................ |
| 3. கணபதிப்பிள்ளை மார்க்கண்டு தேவராஜா | ................ | ................ | ................ |
| 4. குமாரசிங்கம் வேலுப்பிள்ளை | ................ | ................ | ................ |
| 5. ஜமால்தீன் மொகம்மது முஸ்தபா | ................ | ................ | ................ |
| 6. திசநாயக்க முதியன் சேலாகே கருணாரட்ண | ................ | ................ | ................ |
| 7. மொகமட் இப்பராகீம் றகமத்துல்லா | ................ | ................ | ................ |
| 8. சேதுராஜா நடராஜா | ................ | ................ | ................ |

| ஜனநாயக ஐக்கிய முன்னணி கழுகு | தபால் மூலம் வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | மொத்த வாக்குகள் |
|---|---|---|---|
| 1. அப்துல் சலாம் ஆலீம் அப்துல் றகீம் | ................ | ................ | ................ |
| 2. திருநாவுக்கரசு சத்தியசீலன் | ................ | ................ | ................ |
| 3. பத்மநாதன் கேசவகுமார் | ................ | ................ | ................ |
| 4. பொன்னம்பலம் தர்மேந்திரதீசன் | ................ | ................ | ................ |
| 5. மகுமூதுலெவ்வை அப்துல் லத்தீப் | ................ | ................ | ................ |
| 6. வெதிவெல முதியன் செலாகே நந்தசேன | ................ | ................ | ................ |
| 7. ஹசன் மௌலானா செய்யது | ................ | ................ | ................ |
| 8. மொகமட் சாகீர் மௌலானா | ................ | ................ | ................ |

| பொதுஜன ஐக்கிய முன்னணி கதிரை | தபால் மூலம் வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | மொத்த வாக்குகள் |
|---|---|---|---|
| 1. அகமதுலெப்பை முகம்மது மர்சூக் | ................ | ................ | ................ |
| 2. செழியன் ஜே. பேரின்பநாயகம் | ................ | ................ | ................ |
| 3. மைக்கல் பத்மநாதன் | ................ | ................ | ................ |
| 4. மயில்வாகனம் பிரசாத் | ................ | ................ | ................ |
| 5. மாணிக்கம் தர்மரெத்தினம் | ................ | ................ | ................ |
| 6. மாசலாமணி நடேசராசா | ................ | ................ | ................ |
| 7. ராஜநாதன் மயில்வாகனம் | ................ | ................ | ................ |
| 8. சோமசுந்தரம் கணேசமூர்த்தி | ................ | ................ | ................ |

| ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி நங்கூரம் | தபால் மூலம் வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | மொத்த வாக்குகள் |
|---|---|---|---|
| 1. இளையதம்பி நாகலிங்கம் | ................ | ................ | ................ |
| 2. கணபதிப்பிள்ளை பாக்கியராசா | ................ | ................ | ................ |
| 3. நாகேந்திரா குகேந்திரா | ................ | ................ | ................ |
| 4. பொன்னையா இராமச்சந்திரன் | ................ | ................ | ................ |
| 5. மயில்வாகனம் நிஸ்கானந்தராஜா | ................ | ................ | ................ |
| 6. சின்னக்குட்டி தங்கராஜா | ................ | ................ | ................ |
| 7. சுப்பிரமணியம் பகீரதன் | ................ | ................ | ................ |
| 8. செல்லத்தம்பி ரவி | ................ | ................ | ................ |




## தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) மட்டக்களப்பு மாவட்டம்
* வடக்கு கிழக்கு இணைந்த தாயகத்தை வலியுறுத்த * அவசரகால சட்ட நீடிப்புக்கு எதிராக வாக்களிக்க
* " புலி" களுடன் பேசி பொது இணக்கத்துக்கு வருமாறு அரசை வலியுறுத்த

**வெளிச்சவீட்டு சின்னத்திற்கு வாக்களியுங்கள் !**



**பிரசன்னா - 4**



**சாந்தன் - 5**

| லிபரல் கட்சி புத்தகம் | தபால் மூலம் வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | மொத்த வாக்குகள் |
|---|---|---|---|
| 1. அப்துல் கக்கீம் மொகமட் றியாஸ் | .............. | .............. | .............. |
| 2. அலியார் இக்பால் | .............. | .............. | .............. |
| 3. கச்சிமொகமட் அன்வர் | .............. | .............. | .............. |
| 4. காசிம் முகமட் முகமட் பயாஸ் | .............. | .............. | .............. |
| 5. நாகூர்கான் றம்ழான் | .............. | .............. | .............. |
| 6. முத்துசாமி விக்கினேஸ்வரன் | .............. | .............. | .............. |
| 7. மொகமட் அப்துல் காதர் மொகமட் றபீக் | .............. | .............. | .............. |
| 8. சாகுல் கமீட் மொகமட் பரிஸ் | .............. | .............. | .............. |

| சிஹல உறுமய வில்லும் அம்பும் | தபால் மூலம் வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | மொத்த வாக்குகள் |
|---|---|---|---|
| 1. உடவத்தகே புஸ்பகுமார | .............. | .............. | .............. |
| 2. தயா கீர்த்தி முனசிங்க | .............. | .............. | .............. |
| 3. தடல்லே சமிந்த சரத் கொடிகார | .............. | .............. | .............. |
| 4. மகாகப்பின சிங்ஹகுமார மிரன்டோ ஒபயசேகர | .............. | .............. | .............. |
| 5. விமல் தருமஶ்ரீய முகாம்திறம்கே | .............. | .............. | .............. |
| 6. செனவிரத்ன முதியன்செலாகே நில்மினி குமாரி செனவிரத்ன | .............. | .............. | .............. |
| 7. ஹேவாபதிரன்னகலாகே எவன்ஸ் பத்திரன | .............. | .............. | .............. |
| 8. கேரத் முதியன்செலாகே தருமபால கேரத் | .............. | .............. | .............. |

| சிங்ஹளயே மஹசம்மத பூமிபுத்ர பக்ஷய விமானம் | தபால் மூலம் வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | மொத்த வாக்குகள் |
|---|---|---|---|
| 1. எம். ஏ. வசந்தகுமார | .............. | .............. | .............. |
| 2. எம். வி. சந்திரசிறி வீரவம்ச | .............. | .............. | .............. |
| 3. எஸ். கே. விக்ரம ஆரச்சி | .............. | .............. | .............. |
| 4. கே. ஏ. டீ. விஜிதா றோகினி | .............. | .............. | .............. |
| 5. கே. ஏ. நிலுபுல் நிசாந்த | .............. | .............. | .............. |
| 6. கலபட தேவகே அஜித் | .............. | .............. | .............. |
| 7. ஜி. டீ. லலித்தா | .............. | .............. | .............. |
| 8. டீ. எம். உதித்தலால் | .............. | .............. | .............. |

| சுயேச்சைக்குழு - 1 மீன் | தபால் மூலம் வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | மொத்த வாக்குகள் |
|---|---|---|---|
| 1. அந்துணன் கந்தசாமி | .............. | .............. | .............. |
| 2. அருளம்பலம் விஜயன் | .............. | .............. | .............. |
| 3. இராசையா துரைரெத்தினம் | .............. | .............. | .............. |
| 4. காத்தமுத்து விஸ்வலிங்கம் | .............. | .............. | .............. |
| 5. காளிராசா ரமணன் | .............. | .............. | .............. |
| 6. தங்கராசா இராமச்சந்திரன் | .............. | .............. | .............. |
| 7. நாகராசா நேசராசா | .............. | .............. | .............. |
| 8. சாமித்தம்பி வேலாயுதம் | .............. | .............. | .............. |

| சுயேச்சைக்குழு - 3 வண்டில் | தபால் மூலம் வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | மொத்த வாக்குகள் |
|---|---|---|---|
| 1. அழகரெட்ணம் சிவகுமார் | .............. | .............. | .............. |
| 2. கணேசன் வசந்தரூபன் | .............. | .............. | .............. |
| 3. தேவராஜ் கமல்ராஜ் | .............. | .............. | .............. |
| 4. மட் தமிழ் முத்தமிழ் முத்தழகு | .............. | .............. | .............. |
| 5. வெள்ளைத்தம்பி சுபாஸ்கரன் | .............. | .............. | .............. |
| 6. சிங்காரவேல் சிவகுமார் | .............. | .............. | .............. |
| 7. சின்னத்தம்பி செல்வம் | .............. | .............. | .............. |
| 8. சுவீகரன் நவரஞ்சன் | .............. | .............. | .............. |

| சுயேச்சைக்குழு - 5 தொலைபேசி | தபால் மூலம் வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | மொத்த வாக்குகள் |
|---|---|---|---|
| 1. அபுல் ஹசன். எம்.ஜ | .............. | .............. | .............. |
| 2. கணபதிப்பிள்ளை செல்லத்துரை | .............. | .............. | .............. |
| 3. கலர்ந்தர்லெப்பே முகமட் ஜெகியா | .............. | .............. | .............. |
| 4. தீனுல். டீ | .............. | .............. | .............. |
| 5. மொகமட் அமீர் கம்ஸா. எம். ஐ. | .............. | .............. | .............. |
| 6. மொகமட் மாகீர். ஏ. எஸ். எல். | .............. | .............. | .............. |
| 7. ராஜகுலேந்திரன். கே. | .............. | .............. | .............. |
| 8. சமீம். எச். எம். ஏ. | .............. | .............. | .............. |

| ஜனநாயக இடதுசாரி முன்னணி மணிக்கூடு | தபால் மூலம் வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | மொத்த வாக்குகள் |
|---|---|---|---|
| 1. அப்துல் மஜீத் மொகமட் சமீம் | .............. | .............. | .............. |
| 2. கனகையா சிவமூர்த்தி | .............. | .............. | .............. |
| 3. கறுவல்தம்பி சிவராஜா | .............. | .............. | .............. |
| 4. கீரன்திட்டியபஞ்ஞாசேகர திஸ்ஸ தேரோ | .............. | .............. | .............. |
| 5. முகமது லதீபா செய்யது உமர் | .............. | .............. | .............. |
| 6. மொகமட் குசின் மொகமட் இலியாஸ் | .............. | .............. | .............. |
| 7. மொகமட் முஸ்தபா மொகமட் அஸ்மின் | .............. | .............. | .............. |
| 8. விசுவாசம் பஸ்து பீ.பீ | .............. | .............. | .............. |

| றுகுண ஜனதா பக்ஷய மோட்டர் கார் | தபால் மூலம் வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | மொத்த வாக்குகள் |
|---|---|---|---|
| 1. அமிர்தராஜ் பாடிகம | .............. | .............. | .............. |
| 2. உஸ்வத்த கங்கானம்கே சமன் ஜெயகுமார சகபந்து | .............. | .............. | .............. |
| 3. திரிமாதுர லின்ஸ்கி மெண்டிஸ் | .............. | .............. | .............. |
| 4. மொகமட் ஜலால்தீன் மொகமட் மக்பூல் | .............. | .............. | .............. |
| 5. ராஜகோபால் செரான் கிறிஸ்ரி நிரோ சங்கர் | .............. | .............. | .............. |
| 6. லியன ஆரச்சிகே சிறியானந்த சில்வா | .............. | .............. | .............. |
| 7. வெடிகார சிறிசேன த சில்வா | .............. | .............. | .............. |
| 8. சிங்கபுறுத்திவி அமர்த்தநாயக்க முதியன்சேலாகே சம்பத் அர்த்தநாயக்க | .............. | .............. | .............. |

| அகில இலங்கைத் தமிழ்க் காங்கரஸ் துவிச்சக்கரவண்டி | தபால் மூலம் வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | மொத்த வாக்குகள் |
|---|---|---|---|
| 1. அழகையா குணரட்னம் | .............. | .............. | .............. |
| 2. ஆதிலிங்கம் சண்முகநாதன் | .............. | .............. | .............. |
| 3. காத்தமுத்து தருமலிங்கம் | .............. | .............. | .............. |
| 4. காளிக்குட்டி அருளம்பலம் | .............. | .............. | .............. |
| 5. யோசப் ராஜேந்திரன் தவராஜா | .............. | .............. | .............. |
| 6. தட்சணாமூர்த்தி சிவநாதன் | .............. | .............. | .............. |
| 7. ஞானமுத்து கிருஷ்ணப்பிள்ளை | .............. | .............. | .............. |
| 8. பிறின்ஸ் குணராஜா காசிநாதர் | .............. | .............. | .............. |

| சுயேச்சைக்குழு - 2 முச்சக்கர வண்டி | தபால் மூலம் வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | மொத்த வாக்குகள் |
|---|---|---|---|
| 1. அப்துல் அஸீஸ் மஹ்முட் லெவ்வே | .............. | .............. | .............. |
| 2. அப்துல் றசாக் மொகமட் செரிப் | .............. | .............. | .............. |
| 3. ஆதம்பாவர் அகமட் மீராசாகிபு | .............. | .............. | .............. |
| 4. பக்கீர் முகிதீன் அலி அக்பர் | .............. | .............. | .............. |
| 5. மொகமட் இஸ்மாயில் மொகமட் றபீக் | .............. | .............. | .............. |
| 6. வெள்ளத்தம்பி மொகமட் முபாறக் | .............. | .............. | .............. |
| 7. சுலைமாலெவ்வை மஸாகிறா | .............. | .............. | .............. |
| 8. செய்யிட் மொகமட் மொகமட் பஸீர் | .............. | .............. | .............. |

| சுயேச்சைக்குழு - 4 கிரிக்கட் மட்டை | தபால் மூலம் வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | மொத்த வாக்குகள் |
|---|---|---|---|
| 1. அப்துல் மஜீத் அபூதாஹிர் | .............. | .............. | .............. |
| 2. அகமட் கலிலூர் றகுமான் | .............. | .............. | .............. |
| 3. அசனார் அப்துல் நசார் | .............. | .............. | .............. |
| 4. கயாத் முகமட் நூர்முகமட் | .............. | .............. | .............. |
| 5. காசிமாலெப்பெ இசடீன் | .............. | .............. | .............. |
| 6. முஸ்தபா முகமட் உசனார் | .............. | .............. | .............. |
| 7. முகமட் காசிம் முகமட் இஸ்மாயில் | .............. | .............. | .............. |
| 8. முகமட் ஹசன் முகமட் முபீன் | .............. | .............. | .............. |






மட்டக்களப்பு மாவட்டத்தில் பல
தொழிற்சாலைகளை அமைத்து
இளைஞர் யுவதிகளுக்கு
தொழில்வாய்ப்பு வழங்க
எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ் வை
ஆதரிப்போம்.

எம். எல். ஏ. எம் ஹிஸ்புல்லாஹ் தேசிய ஐக்கிய முன்னணி

# தடுப்புக் காவலிலிருந்த மூன்று இளைஞரும் ஒரு வருடத்தின் பின் விடுதலை

(நீதிமன்ற நிருபர் சே.பங்கயற்செல்வன்)

பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச்சட்டம் ஆகிய வற்றின் கீழ் கைது செய்து கடந்த ஒரு வருடம் இரு மாதமாக களுத் துறை, மட்டக்களப்பு சிறைச்சா லைகளில் தடுத்த வைக்கப் பட்டிருந்த மூவரை அண்மையில் மட்டக்களப்பு மேல்நீதிமன்ற நீதவான் ஏ.என்.இராமச்சந்திரன் விடுதலை செய்தார்.

சந்திவெளியை சேர்ந்த பாலகுரு பாலதம்பிமணியம், செங்கலடி ஐயங்கேணியைச் சேர்ந்த என்டன் மரிதாஸ், தன்னா முனை-ஆறுமுகத்தான் புதுக்குடியிருப்பை சேர்ந்த கே.பால சேகர் ஆகியோரே விடுதலை செய் யப்பட்டவர்களாவர்.

முதலாம் எதிரி விடுதலைப் புலி பயங்கரவாத உறுப்பினராக இருந்து கொண்டு புனானை, பாலையடிவட்டை, வாகனேரி, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் கடமை புரிந்து வந்த இராணுவத் தினருக்கு மரணத்தை விளைவிக்க எத்தனித்தார் என அவசரகாலச் சட்டத்தின் கீழும், சட்டமுறையான அரசாங்கத்திற்கு எதிராக போராட் டத்தை நடாத்தி வருகின்ற விடுத லைப்புலி இயக்கத்தில் உறுப் பினராக இருந்து கொண்டு ஆயுதப் பயிற்சி பெற்றார் என பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழும் அரச தரப் பினரால் குற்றம் சாட்டப்பட்டு இருந்தது.

இரண்டாம் எதிரி விடுத லைப்புலி உறுப்பினர்களுக்கு உத வும் நோக்கில் பாதுகாப்பு படை யினரோ, பொலிசாரோ கண்டு பிடிக்க முடியாத விதத்தில் காடுகளிலும், பற்றைக் காடுகளிலும் உணவு வகைகளை ஒளித்து வைத்து விடுதலை புலிகள் இயக்கத்திற்கு கொண்டு போய் ஒப்ப டைத்தார் என அவசரகாலச் சட்டத்தின் கீழும், மூன்றாம் எதிரி விடுதலைப்புலி பயங்கரவாத உறுப்பினரான சசி, சுதாகரன், சகாந்தன் ஆகியோரது நடமாட்டம் பற்றிய தகவல்களை தெரிந்தி ருந்தும் அத்தகவலை பொலிஸ் உத்தியோகத்தருக்கு தெரிவிக்கத் தவறினார் என பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழும் அரச தரப்பினரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

மேற்கூறிய குற்றச்சாட்டுக்க ளின் பேரில் குறித்த எதிரிகளை கடந்த வருடம் இராணுவத்தினர் கைது செய்து தொடர் விசாரணைக் காக மட்டக்களப்பு நாசகாரத்தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைத்திருந்தனர். அதன் பின்னர் எதிரிகள் மூவரும் கடந்த ஒரு வருடம் இரு மாதமாக மட்டக்களப்பு, களுத்துறை சிறைச் சாலைகளில் தடுத்து வைக்கப்பட் டிருந்தார்கள்..

இவ்வழக்கு விசாரணைகள் அண்மையில் மட்டக்களப்பு நீதிமன் றத்தில் நடைபெற்றது. அப்போது எதிரிகள் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை பதிவு செய்த சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல குமார காலமாகிய படியால் எதிரிக ளுக்கு எதிரான குற்றப்பகா வாபஸ் வாங்குவதாக அரச தரப்பு வழக்கறிஞர் ஆர்.கண்ணன் மன் றுக்கு தெரிவித்தார். அதன் நிமித்தம் குறித்த எதிரிகளை மேல்நீதிமன்ற நீதிபதி விடுதலை செய்தார். எதிரி தரப்பில் மனித உரிமை இல்லச் சட்டத்தரணி என்.சிவனந்தராஜா ஆஜராகி இருந்தார்.

# ரணில்-புலி உறவு

## உளவுத்துறை விசாரணையில் ஊர்ஜிதமாம்

(கொழும்பு)

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலின்போது ஐ.தே.கட்சிக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நெருங்கிய தொடர்புகள் இருந்தன என்பதை உளவுத்துறை விசார ணைகள் தெளிவுபடுத்தியுள்ளன.

கொழும்பு நகர மண்டப வளவில் நடந்த பொதுக்கூட்டத்தின் போது ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்காவை படு கொலை செய்ய முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டதற்கு முன்னரும் பின்னரும் இந்த தொடர்பு தீவிரம் அடைந்திருந்ததாக ''சண்டே ஒப்சேவர்'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

நகர மண்டபம், ஜாஎல ஆகிய இடங்களில் இடம் பெற்ற குண்டு வெடிப்புக்கள் பற்றி புலனாய்வுப் பிரிவினர் விசாரணை கள் நடத்தியுள்ளனர். விடுதலைப் புலிகளின் முகாம்களிலிருந்து வெடிமருந்துப் பொருட்களை கொண்டு வருவதில் ஐ.தே.கட்சி யின் முக்கிய உறுப்பினரும் சம்மந் தப்பட்டிருந்தார்கள் என்றும் தெரிய வந்துள்ளது.

அமைச்சர் மகிந்தபால சிறிசேனாவை கொலை செய்வ தற்கு மேற்கொண்ட சதி முயற்சி பற்றிய விசாரணைகள் அதனை மேலும் உறுதிப்படுத்தியுள்ளன.

மட்டக்களப்பு பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் ஐ.தே. கட்சியினருக்கும் இடையிலான உறவுகள் களனி ஆகிய பகுதிகளில் உள்ள ஐ.தே.கட்சி யினருடனான தொடர்புகள் வரை விரிவடைந்திருந்தன.

ஜனாதிபதியை கொலை செய்ய முயன்ற பெண் தற்கொலை யாளியின் சகோதரி என கருதப்படும் மாணிக்கம் கனகேஸ்வரி விசா ரணைக்கு உட்படுத்தப்பட்ட போது இது தொடர்பான தகவல்கள் வெளியாகி யுள்ளன.

ஜாஎல குண்டுத் தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் ஐ.தே.கட்சிக்கும் விடுதலைப்புலிகளுக்கும் நெருங் கிய தொடர்பு இருப்பதாக கூறி யுள்ளார்.

# சென்ற வருட சாதனை இவ்வருடம் முறியடிப்பு

(மருதமுனை நிருபர் நழீம்.எம்.பதுர்தீன்)

கடந்த ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் புலமைப்பரிசில் பரீட்சையில் 51 மாணவர்கள் கல்முனை பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட மருதமு னைக் கிராமத்தில் சாதனையை முறியடித்துள்ளனர்.

மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் 22 மாணவர் களும் ஷம்ஸ் மத்திய கல்லூரியில் 19, அல்ஹம்றாவில் 12, புலவர் மணி ஷரிபுத்தீன் வித்தியாலயத்தில் 04, மொத்தம் 57 பேர் சித்தியடைந்த மகிழ்ச்சியில் இப்பெறுபேற்றைப் பெற முன்னின்று உழைத்த பாடசாலை அதிபர்களையும், ஆசிரியர்களையும், பெற்றோர்களையும் பாராட்டும் துண்டுப் பிரசுரங்கள் பொதுமக்களா லும், பொது அமைப்புக்கள் மூல மும் வெளியிடப்பட்டன.

# அல்ஹம்றா முதலிடம்

(மருதமுனை நிருபர் நழீம்.எம்.பதுர்தீன்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு கல்முனைப் பிரதேச பாடசாலை மாணவர்களிடையே நடைபெற்ற சிறுவர் சித்திரப்போ ட்டியில் மருதமுனை அல்ஹம்றா வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி.எம்.ஷர்மிலா ஹம்சுல் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

# ''போட்டிப் பரீட்சை போல தேர்தல் போட்டியும் இருக்கிறது''

**-செல்வராசா**

(காந்தன்)

இம்முறை நடைபெற விருக்கும் தேர்தல் ஓர் போட்டிப் பரீட்சைக்கு விண்ணபித்து சித்தியடைவது போன்ற ஓர் நிலைபோல் உள்ளது. அதாவது ஓர் அரசாங்க திணைக்களத்திலே 100 வெற்றிடம் உள்ளதென்றால் 1000திற்கு மேற்பட்டோர் விண்ணப் பார்கள். அதேபோன்றுதான் இப்போ துள்ள அரசியல் நிலையும். 5பேர் தெரிவாகும் மட்டக்களப்பில் 168 பேர் விண்ணப்பித்துள்ளனர். இவர் களை சித்திபெறச் செய்வது மக்களே.

இவ்வாறு சென்ற சனி மாலை இருதயபுரத்தில் நடைபெற்ற பிரச்சாரக்கூட்டத்தில் உரையாற்றிய தமிழர் விடுதலைக்கூட்டணி பாராளு மன்ற உறுப்பினர் பொன்.செல் வராசா (நவம்) கூறினார். அவர் மேலும் உரையாற்றுகயில்

எமது மாவட்டத்திலே போட்டியிடும் ஐக்கிய தேசிய கட்சியிலே மூன்று முஸ்லிம்களும் ஐந்து தமிழ்ரும் போட்டியிடு கின்றனர். இவர்கள் அனைவரும் சேர்ந்து ஐ.தே.க.மௌலானாவை வெற்றி .பெறச் செய்ய இயலுமே தவிர அவர்களால் வெற்றி பெற முடியாது. இவர்களுக்கு அளிக்கும் வாக்குகள் வீணானது.

இதே போன்றுதான் பொது ஜன ஐக்கிய முன்னணியில் போட்டியிடுபவர்களும் இரண்டு வாரம் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து தமிழரைக் கொன்று குவிக்கும் அவசரகால சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்துவிட்டு இப்போது அதே மக்களிடம் வந்து வாக்கு கேட்டு நிற்கின்றனர்.

இதேபோன்றுதான் தேசிய ஐக்கிய' முன்னணி என்ற பெயரோடு இன ஒற்றுமை பற்றி கதைத்துக் கொண்டு எம்மக்களிடம் சென்று றப்பர் வாளிகளும், மண்வெட்டிக ளையும் கொடுத்து வாக்கு கேட்டு வருகின்றனர். இதேபோன்றுதான் 1956ம் ஆண்டு மாக்கான் மாக்கார் என்றவர் கூறினார். "மட்டக்களப்பு தமிழ் மாடுகளிடம்'' 10 ரூபா கொடுத்து வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் சென்றுவிட்டேன் என்று அதற்கு இப்போது எமது தமிழ் மக்கள் மசியப் போவ தில்லை. சரியான பாடம் புகட்டப் போகிறார்கள்.

# பிறந்த திகதி தரும் யோகம்.

## ஜோதிடம் மே - 01

மே மாதம் 1-10-19-28ம் தேதிகளில் பிறந்தவர்களின் பலன்கள்:-

எண் **1** அதன் அதிபதி சூரியன் மே மாதம் 1.10ந் தேதிகளில் பிறந்தவர்கள் செவ்வாயின் குணத்தையும்,19.28ம் திகதிகளில் பிறந்தவர்கள் வெள்ளியின் குணத்தையும் கொண்டவர்கள்.

சுயகட்டுப்பாடும். ஆராய் ச்சிமனப்பான்மையும் கொண்ட வர்கள். பொறுமை சாலிகள், சாது மிரண்டால் காடு கொள்ளாது என்ற குணம் கொண்டவர்கள். பொது நோக்குடையவர்கள். ஆனால் தங்கள் செயல்பாட்டில் யாரும் குறிக்கிடுவதை விரும்பாதவர்கள் விமர்சனத்தை விரும்பாதவர்கள்.

எண்ணங்கள் நிறை வேறும் யோகசாலிகளே .பொது நலச் சேவையில் ஆர்வம் கொண்டவர் கள். அரசாங்கத்தில் பெரிய பதவி வகிப்பீர்கள். பெரிய வியாபார நிலையங்களை நிர்வகிக்கும் பொறுப்பும் அமையும்.

வாழ்க்கை வாழ்வதற்கே என்று அனைத்து வசதிகளையும் அனுபவிப்பீர்கள். அதிஷ்ட லாபச் சீட்டு. ரேஸ் போன்றவற்றில் லாப மும் பெறுவீர்கள்.

நல்ல உடல் அமைப்புக் கொண்டவர்கள். செயலாற்றும் சக்தியும் பெற்றவர்கள். தீவிரமாக உழைப்பவர்கள். அதனால் ஓய்வு அதிகம் தேவை. நல்ல உறக்கம், நன்மையான உடல் நலம் தரும். நுரையீரல்நோய், சளித்தொல்லை ஏற்படலாம். சூரிய நமஸ்காரம் தினமும் காலையில் செய்வதால் உடல்நலமும். சக்தியும் பெறலாம்.

1-2-6-10-11-19-20-24-28-29ம் தேதிகள் எந்த ஆண்டு எந்த மாதமானாலும் யோகம் தரும் நாட்களாகும்.

உங்களது வாழ்க்கை கயில் 1-2-6-10-11-15-19-21-24-28-29-33-37-38-42-46-47-51-55-56-60-64-65-69ம் வயதுகளில் மிகவும் முக்கியமான நிகழ்ச்சிகள் நடைபெறும்.

கூட்டுஎண்1-2-6ஆக வரும் தேதிகளில் பிறந்தவர்களுடன் ஏற்படும் உறவு பலப்படும். வாழக் கைத்துணைவரும் இதே எண்ணாக அமையுமானால் இன்பமான இல்ல றம் அமையும்.

இவர்கள்கூடிய வகையில் லேசான அல்லது பழுப்பு நிறமான உடைகளையாவது மஞ்சள் அல் லது பொன் நிறத்தில் உடை கள்அணிந்தால் சந்தோஷமும், அதிர்ஷ்டமும் சேரும்.

நவமணி:- மாணிக்கம்' (ரூபி) புறா இரத்தம் போன்றது இதை அணிவதால் உடலில் ஏற்படும் சூடு குறையும், உஸ்னத்தால் ஏற்படும் கணநோய், தலைவலி, எரிச்சல் நீங்கும்.

புஸ்பராகம் சிக்கல் தங்கம் போன்று பொன் நிறத்தில் ஒளிதரக்கூடியது.இதை அணி வதால் மலட்டுத்தன்மை நீங்கும், நுரையீரல் நோய். சோகைநோய் ஆகியவற்றின் தீவிரம் குறையும்.

**வே.தவராசா**


மூன்றாம் தரப்பு மத்தியஸ்துடன் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளோடு புதிய அரசை பேச்சுக்கு வற்புறுத்தவும்.

வன்செயலால் சின்னாபின்னமாக்கப்பட்டு கிடக்கும் கிராமங்களை புனரமைக்கவும், மக்களுக்கு புனர்வாழ்வு அளிக்கவும்.

வாகரைப் பிரதேசத்திலுள்ள தமிழ் கிராமங்கள் துண்டாடப்பட்டு சிங்கள, முஸ்லிம் பிரதேசங்களுடன் இணைப்பதற்கு மேற்கொள்ளும் சதி முயற்சிகளை, முறியடிக்கவும்.

உணவுப் பொருள், எரிபொருள் விநியோகம், மருத்துவ வசதி, போக்குவரத்து முதலான அடிப்படை தேவைகள் மறுக்கப்பட்டு அவதியுறும் அப்பாவி மக்களின் துயர் துடைப்பதற்கும்

மட்டக்களப்பு மாவட்ட வாக்காளப் பெருமக்களே! நான் சார்ந்த தமிழர் விடுதலைக்கூட்டணியின் சின்னமான உதய சூரியனுக்கும், எனது இலக்கமாகிய 2ற்கும், வாக்களித்து உதவுமாறு பணிவுடன் வேண்டிக் கொள்கின்றேன்



அழகு சுப்பிரமணியம் சத்தியநாதன்


# இலவசப் பாட நூல் விநியோகம்

(வெல்லாவெளி நிருபர்)

பட்டிருப்பு வலயப் பாட சாலைகளுக்கான ஒரு தொகுதி பாடநூல்கள், கடந்த வியாழன், வெள்ளிக் கிழமைகளில் பாடசாலை அதிபர்களிடம் அவ்வவ பிரதேசக் கல்விப் பணிப்பாளர்களினால் ஒப்படைக்கப்பட்டது.




# இலங்கை அணியுடனான போட்டியில் அமோக வெற்றியீட்டிய பாக்கிஸ்தான்

(பிரகாஸ்)

தற்போது நைரோபில் நடைபெறும் சர்வதேச கிரிக்கட் சம்மேளனத்துக்கான கிரிக்கட் சுற்றுப்போட்டியில் இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடி 45.3 ஓவர்களில்சகல விக்கட்டுக் களையும் இழந்து194 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

ஸ்கோர் விபரம் அணித் தலைவர் சனத்ஜெயசூரிய-39, ரசல் ஆனொல்ட்-38, ஏனைய வீரர்கள் எவரினதும் துடுப்பாட்டம் பிரகாசிக் கவில்லை.என்பதும் குறிப்பிடத் தக்கது.

பந்து வீச்சில் வசீம் அக்ரம்-10ஓவர்கள் பந்துவீசி 40ஓட்டங்களைகொடுத்து 3விக்கட் டையும், அஸார்முகமட்-10ஓவர்கள் பந்து வீசி 52ஓட்டங்களுக்கு 3விக்கட்டுக்களையும், சக்லீன் முஸ்டக் 30ஓட்டங்களுக்கு 2விக்கட்டுக்களையும் வீழ்த்தினர்.

பாக்கிஸ்தான் 43.1ஓவர் களில் 1விக்கட்டினை இழந்து 196ஓட்டங்கள்.இதில் ஆட்டமிழக் காமல் சயிட் அன்வர் 105, யூசுப் யோகானா 45, இம்ரான் நசீர் 40 ஓட்டங்களையும்பெற்று பாக்கிஸ் தான் அணியின் வெற்றிக்கு உரமூட்டினர்.

இதில் முக்கிய விடயம் என்னவென்றால் சகீத் அன்வர் சதங்கள் குவித்தவர் வரிசையில் 2வது இடத்தில் இருக்கிறார். இவர் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இலங்கையுடனான போட்டியில் 105ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்று தனது 18வது சதத்தை உறுதிப்படுத்திக் கொண்டார். சதம் எடுத்தவர் வரிசையில் சச்சின் டெண்டுல்கர் இவர் இந்திய வீரர். 25சதங்களைபெற்று முன்அணியில் திகழ்கிறார் இத்தோடு பந்துவீச் சிலும் பாக்கிஸ்தானிய வீரர் வசீம் அக்ரம்இதுவரை430 விக்கட்டுக் களை1நாள் சர்வதேசப்போட்டியில் பெற்று முன் அணியில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## இந்தோனேசியா பயணமாகும் இலங்கை பட்மின்டன் அணி

அடுத்தமாதம் இந்தோ னேசியா யகார்த்தாவில் நடைபெற வுள்ள ஆசியா பட்மின்டன் சுற்றுப் போட்டியில் இலங்கை அணியும் கலந்துகொள்ளவுள்ளது.

இலங்கையில் இருந்து செல்லவுள்ள ஆண் பெண் இரு அணிகளுக்கும் தற்போது தீவிர பயிற்ச்சி வழங்கப்பட்டு வருகிறது

இப்போட்டியில் கலந்து கொள்ளும் வீரர்களுக்கு ரொசான் வீரக்கோன் பயிற்ச்சி வழங்கி வருகிறார்.

## நைரோபியில் நடைபெறும் போட்டி விபரம்

(பிரகாஸ்)

தற்போது நைரோபியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போட்டிகளில் அடுத்த சுற்றில் மோதிக் கொள்ளவுள்ள நாடுகளின் விபரம்

தொடர்ந்து தென் ஆபிரிக்கா இங்கிலாந்து மோதவுள்ளன. இதில் வெற்றி பெறும் அணியுடன் இந்தியா அணி விளையாடும்.

அதேபோன்று, நியுசிலாந்து சிம்பாவே அணிகள் மோதிக்கொள்ளவுள்ளன. இப் போட்டியில் தெரிவாகும் ஏதோ ஒரு அணியுடன் பாக்கிஸ்தான் அணி விளையாடும்.

அப்போட்டியில் வெற்றி பெறும்அணிகள் இறுதிப்போட்டிக்கு தெரிவாகும். இப்போட்டிகள் அனைத்தும் 15ஆம் திகதியுடன் முடிவடையும்என்பது . குறிப்பிடத் தக்கது.

# புதுமுக வீரர்கள் வரவால் புதிய உற்சாகத்துடன் இந்திய அணி

புதுமுக வீரர்களின் வரவால் இந்திய அணியின் திறமைக்கு புதிய உற்சாகம் பிறந்துள்ளது என்பது ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான போட்டியில் வெற்றி பெற்றதன்மூலம் உறுதியாகியுள்ளது.

உலகக்கோப்பை சாம்பியன் களுக்கு எதிரான போட்டியில் வெற்றி பெறுவது என்பது இந்திய அணிக்கு புதிய தெம்பும், அதே சமயத்தில் மிகவும் இன்றியமையாத நிகழ்வும் ஆகும். குறிப்பாக ஒருநாள்போட்டிகளில் தொடர்ந்து7போட்டிகளில் தோல்வியுற்றதற்குப் பின் இந்த வெற்றி கிடைத்துள்ளது என்பது மிகவும் மகிழ்ச்சியடைய வேண்டிய விஷயமாகும்.ஐ.சி.சி. நாக்-அவுட் கிரிக்கெட்போட்டியின் காலிறுதிப்போட்டியில் ஆஸ்திரேலியாவை வென்றதில் இந்திய அணியின் புதுமுக வீரர்களான யுவராஜ் சிங், ஜாஹிர் கான் இருவரின் பங்கும் மிகவும் பாராட்டுதலுக்குரியதாக இருந்தது.

யுவராஜ் சிங் பேட்டிங், பீல்டிங் திறமையும், ஜாஹிர் கானின் பந்துவீச்சு, பீல்டிங் திறமையும் மிகவும் அருமையாக இருந்தது. இதன் மூலம் இந்திய அணிக்கு புதிய தெம்பு அளித்தது போன்று இருந்தது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு மிகச் சிறப்பான முறையில் விளையாடி இந்திய அணி வெற்றியைப் பெற்றுள்ளது. சர்வதேச ஒருநாள் போட்டியில் முதன்முதலாக விளையாடிய யுவராஜ் சிங் 80 பந்துகளை சந்தித்து84ரன்களை குவித்தார். துரதிர்ஷ்டவசமாக சதமடிக்கும் வாய்ப்பை யுவராஜ் சிங் இழந்தாலும் அவரது ஆட்டம் அனுபவமிக்க வீரரைப் போல் இருந்தது.

மற்றொரு வீரரான ஜாஹிர் கானும் கடினமான சூழ்நிலையின்போதும் சிறப்பான முறையில் பந்துவீசி ரன்களைக் கட்டுப்படுத்தினார். 10 ஓவர்கள் வீசிய ஜாஹிர் கான் 40 ரன்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார். பீல்டிங்கிலும் இருவரும் சிறப்பாக செயல்பட்டனர். யுவராஜ்சிங் இயான் ஹார்வேக்கு டைவ் அடித்து பிடித்த கேட்ச் மிகவும் அற்புதமானதாகும். மேலும் பெவனை ரன் அவுட் செய்த விதமும் சிறப்பாக இருந்தது.

இளம் புதுமுக வீரர்கள் அணியில் இடம்பெற்று புதிய மாற்றம் ஏற்படுத்தியதைப் பற்றி புகழ்ந்துரைத்த கேப்டன் கங்குலி, தற்போது இந்திய அணிக்கு இளைஞர்கள் தேவையில்லை, நன்றாக விளையாடக்கூடிய திறமைமிக்க இளைஞர்கள்தான் தேவை என்று தெரிவித்தார்.

இந்திய இளம் வீரர் யுவராஜ் சிங் பற்றி கருத்து தெரிவித்த ஆஸ்திரேலிய கேப்டன் ஸ்டீவ் வாஹ், யுவராஜ் சிங்கின் விளையாட்டு மிகவும் அருமையாகஇருந்தது. இருப்பினும் அவர் டெஸ்ட் போட்டிகளில் எவ்வாறு விளையாடுகிறார் என்பதைகவனத்தில் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார். ஜாஹிர்கானின் பந்துவீச்சானது நல்ல வேகத்துடனும், அதே சமயத்தில் சில இக்கட்டான சூழ்நிலையில்பதற்றம் இல்லாமலும்பந்துவீசியது குறிப்பிடத் தக்கது. அவர் 'யார்க்கர்' மூலம் என்னை அவுட் ஆக்கியது ஆச்சரியப்பட வைத்தது என்று எஸ்.வாஹ் தெரிவித்தார்.

மேலும், எஸ்.வாஹ் கூறுகையில், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் இந்தியாவின் பீல்டிங் நல்ல முறையில் இருந்தது. இளம் வீரர்களின் துடிப்புமிக்க பீல்டிங் மூலம் இந்திய அணி வெற்றிப் பாதைக்கு முன்னேறியது என்று தெரிவித்தார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரானபோட்டியில் ஆட்ட நாயகன் விருது பெற்ற யுவராஜ் சிங் கூறுகையில், நான் அதிக மகிழ்ச்சி அடைகின்றேன். குறிப்பாக உலக சாம்பியனுக்கு எதிராக நான் சிறப்பாக ஆடியது எனக்குஇரட்டிப்பு மகிழ்ச்சியாகும் என்று தெரிவித்தார்.

இந்த புதிய சீசனில் சிறப்பான வெற்றியின் மூலம் தனதுஆட்டத்தை துவக்கியுள்ளது இந்திய அணி. அதே சமயம் இளம் வீரர்கள் துடிப்புமிக்க உற்சாகத்துடன் தங்களதுகிரிக்கெட் வாழ்க்கையை ஆரம்பித்துள்ளனர். இதன் மூலம் இந்தியாவில் வாழும் பல கோடிக்கணக்கான கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் பலத்தஎதிர்பார்ப்பு கிளம்பியுள்ளது. இந்தவெற்றி தொடர்ந்து நீடிக்க இந்திய கிரிக்கெட் ரசிகர்கள்அனைவரும் ஆவலாய் உள்ளனர்.

# வாசகர் நெஞ்சம்

## கவனிப்பாரற்றுக் கிடக்கும் ஹிஜ்ரா வீதி

கல்முனை நகரிலிருந்து மணல் சேனை, மண்டூர், சவளக்கடை, சொறிக்கல்முனை ஆகிய கிராமங்களிற்கு செல்லும் ஹிஸ்ரா வீதி குன்றும் குழியுமாக மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது.

இலங்கை வங்கிக்கிளை, தபாலகம், இலங்கை மின்சாரசபை, தமிழப்பிரிவு பிரதேச செயலகம், இயந்திர உபகர்ணசாலை, போக்குவரத்து சபை காரியாலயம், பதிவுக்காரியாலயம், கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம், கலவிஅலுவலகம் ஆகிய அலுவலகங்களில் கடமை புரியும் ஊழியர்கள் அனைவரும் பெரும் சிரமத்திற்கு மத்தியில் அவ்வீதியால் கடமைக்கு செல்வதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளாது அசிரத்தை காட்டுவதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வீதியின் அவல நிலை குறித்து பலரினால் பல தடவைகள் தினக்கதிர் பத்திரிகையின் ''வாசகர் நெஞ்சம்'' பகுதியில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தும் இதுவரைக்கும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.தற்போது மழைக்காலம். தொடர்ந்து மழை பெய்யுமானால் அவ்வீதியில் இரண்டு அடிக்கு மேல் நீர் தேங்கி நின்றால் அப்பகுதி மக்களின் பயணங்கள் தடைப்படுவதுடன், அதிகமான வாகன விபத்துக்கள் ஏற்படுவதற்கும் வாய்ப்பு ஏற்படும்.

எனவே அப்பகுதி மக்களின் நன்மை கருதி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவாக இவ்வீதித் திருத்த வேலையில் கவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றோம்.

*எஸ்.நாகராஜா*
*நற்பிட்டிமுனை*

## நாய்களால் பெரும் தொல்லை!

மட்டக்களப்பு கருவப்பன்கேணிப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை வரவர அதிகரித்துக் கொண்டே வருகிறது.

நாய்களின் சொந்தக்காரர்கள் இது பற்றி அக்கறை எடுப்பதாக தெரியவில்லை.

இந்தக் கட்டாக்காலி நாய்கள் பாதசாரிகளை மாத்திரமல்ல சைக்கிளில் செலவோரையும் துரத்தித் துன்புறுத்துகிறது.

இது மாத்திரமன்றி தெரு நீளத்திற்கும் அசுத்தம் நிறைந்து காணப்படுகிறது.

ஆகவே மநாகர சபையினர் இது சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

*எஸ்.தங்கவடிவேல்*
*கருவப்பன்கேணி*

## வாசிகசாலைகளைக் கவனிப்பார் யார்?

பெரிய போரதீவு, பட்டாபுரம் ஆகியவற்றில் அமைந்துள்ள வாசிகசாலைகள் கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின்றது. வாசிகசாலை சீராக இயங்க போரதீவுப்பற்று எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து வாசகர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும் எனப் பணிவுடன் வேண்டுகோள் விடுகின்றேன்.

*எஸ்.உதயகுமார்*
*வாசிகசாலை தலைவர்*

# ஆன்மீகம் அறிவோம்

''ஓ.மனமே! உன்னுடைய சொந்தஇடத்திற்கு திரும்பிச் செல்க'' என்னும் வரி, உங்களுள்இருக்கும் தெய்வீகத் தன்மையை நாடிச்செல்ல வழிகாட்டுகின்றது. இந்த உலகம் எமது நிரந்தர இருப்பிடம் அன்று. பேருண்மை இவ்வாறிருக்க,நாமோ உலகத்தில் இன்பங்களை நாடிச்செல்லுகின்றோம். '' ஓ. இறைவா.என்னுடைய நாட்களெல்லாம் முற்றிலும் பயனற்றுத்தான் போகவேண்டுமா?'' என்று சுவாமி விவேகானந்தர் பாடுகின்றார். இந்த இன்பங்கள் எல்லாம் நிரந்தரமானவை அல்ல. நிரந்தரமான அமைதியும், நீடித்து என்றும் நிற்கக்கூடிய மகிழ்ச்சியும், அந்தஎல்லையற்ற பரம்பொருளின் ஆத்ம சொருபம் நாம் தான் என்று உணரப்படும் போது தான் நமக்கு அர்த்தமுள்ளதாகின்றது. தன்னை அறிதல் என்பதில் மட்டும் மானிட வாழ்வின் உண்மையான நிறைவு உண்டாகின்றது.இதுவே, உண்மையான குறிக்கோளைப் பெறவும் வழிபிறக்கும்.

ஆகவே.நமது வாழக்கையிலே, நமது உண்மையான நிரந்தரமான மகிழ்ச்சியின் இடத்தைஅடைவதற்கான ஆசையுடன் கூடிய தர்மக்கிரிகைகளிலே ஈடுபட்டு இப்பூலோகத்திலே பரலோகத்தைநிலை நாட்டுவோம்.

**அருட்.சகோ.ஞா.மரியநாதன்**

# மட்டக்களப்பில் பூரண கர்த்தால் நகரம் வெறிச் சோடியது

(சி.நாகேந்திரன்)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் பூரண கர்த்தால் அனுஷ்டிக்குமாறு சுதந்திர மாணவர்முன்னணி விடுத்த வேண்டு கோளைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று பூரண கர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.**

பதினோராவது பாராளுமன்றத் தேர்தலுக்கு எதிராக தமிழ் மக்கள் தங்கள் எதிர்ப் புணர்வுகளை வெளிப் படுத்துமாறு சுதந்திர மாணவர் முன்னணி கோரிக்கைகளை விடுத்திருந்தது.

மேற்படி கோரிக்கையைத் தொடர்ந்து நேற்று மட்டு நகர் வெறிச்சோடிக் காணப்பட்டது. வர்த்தக நிலையங்கள் வியாபார ஸ்தாபனங்கள் யாவும் மூடப்பட்டு இருந்தன. தனியார் போக்குவரத்து மிகக் குறைவாகவே காணப்பட்டது. அரச போக்குவரத்து சபையின் வெளிமாவட்டங்களுக்கான பஸ்சேவை இடம் பெறவில்லை உள்ளூர் போக்கு வரத்து சேவைகள் மிகக் குறைந்த ளவில் இடம் பெற்றது. நண்பகலுக் குப்பின் தனியார் போக்குவரத்து க்களும் இடம் பெறவில்லை.

இதேவேளை தேர்தல் கடமை களுக்காக மட்டுநகரில் அதிக பொலிசாரும் , இராணுவத்தினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள் ...... மற்றும் செங்கலடி வாழைச்சேனை நகரத்தில் ஓர் இரு வர்த்தக நிலையங்கள் தவிர ஏனைய கடைகள் மூடப்பட்டு இருந்தன மக்கள் நடமாட்டம் குறைவாக காணப்பட்டன.

## மாணவன் தற்கொலை

( சி.நாகேந்திரன்)

தாளங்குடா பெரிய தம்பிரான் ஆலய வீதியில் வசிக்கும் ரகு(12) என்ற மாணவன் ஞாயிறு அன்று நஞ்சு அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

இவர் தற்கொலை செய்வதற்கு அவருடைய குடும்ப தகராறே காரணமாக இருக்கலாம் என அவ்வூர் மக்கள் தெரிவித்தனர்.

## நாகர் .......

ஆலயங்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கி உள்ளனர்.

இதன் காரணமாக குடத்தனையில் அமைக்கப்படவிருந்த வாக்குச்சாவடி நிலையம் பருத்தித்துறை சிவப்பிரகாச வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

இதே நேரம் தேர்தலுக்கு முதல் நாளாக நேற்று யாழ் நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது. மக்கள் நடமாட்டம் குறைவாகக் காணப்பட்டது. எந்த நேரம் என்ன நடக்கும் என்ற அச்ச உணர்வில் மக்கள் காணப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## வாகரை........

வைத்தியசாலைக்கு வந்து சிகிச்சையினைப் பெறவேண்டியுள்ளது.

இதேவேளை மேற்படி வைத்திய சாலைக்கு வைத்தியர்கள் மற்றும் ஊழியர்களை நியமிக்காமையே இதற்கான காரணமாகும் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## வவுனியா..........

த்திற்கு கூடிய பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதே வேளை வவுனியாவில் இருந்து பொலிசாரை ஏற்றிச் சென்ற பஸ் வண்டி ஒன்று விபத்துக்குள்ளாகியதில் அதன் சாரதியும் நடத்துனரும் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## வேட்பாளரை காணவில்லை

(ஜவ்பர்)

திகாமடுல்ல மாவட்டத்தில் தொலைபேசி சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சைக்குழு வேட்பாளரான நெயிந்தக்கண்டு முகமது கபீர் காணமல் போயுள்ளதாக மேற்படி சுயேச்சைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம். இரவு பத்து மணியளவில் தனது நண்பர்களை பார்த்து விட்டு வருவதாகக் கூறிச் சென்றவர் திரும்பி வரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பொத்துவில்லில் தொலைபேசி செயலிழப்பு!

(ஜவ்பர்)

பொத்துவில் பிரதேசத்தில் கடந்த மூன்று நாட்களாக வெளிமாவட்டங் களுக்கான தொலைபேசி அழைப்புக்கள் செயலிழந்து காணப்படுவதாக அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

அக்கரைப்பற்று தொலைபேசி பரிவர்த்த நிலையத்தில் ஏற்பட்டுள்ள கோளாறே இதற்கான காரணமாகும்.தற்போது தேர்தல் தொடர்பான செய்திகளை அறிய ஆர்வமாக உள்ள சூழ்நிலையில் தொலைபேசிகள் துண்டிக்கப் பட்டிருப்பதால் இப்பிரதேச மக்கள் கவலையடைந்துள்ளனர்.

## ஜெயல...

முன்னாள் அமைச்சர் முகம்மது அஸிஸ் , ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருவர் பதிவுத்துறை அதிகாரி ஒருவருக்கும் சேர்ந்து மேற்படி சிறைத் தண்டனை விதிக்கப் பட்டுள்ளது.

## பஸ் ஊழியர்கள் விசனம்

(நமது நிருபர்)

தேர்தல் கடமைகளுக்காக கடமையில் ஈடுபடுத்தப்பட்ட நியூ ஈஸ்ரன் கம்பனியைச் சேர்ந்த பஸ்களின் சாரதிகளுக்கும் பஸ்காப்பாளர்களுக்கும் உணவு வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என ஊழியர்கள் விசனம் தெரிவித் துள்ளனர்.

இது தொடர்பாக தேர்தல் கடமையில் உள்ள பொறுப்பதிகாரிகளிடம் முறையிட்ட போது தம்மால் எதுவும் செய்து தரமுடியாது எனத் தெரிவித்தனராம்.

இது தொடர்பாக மேற்படி ஊழிய்கள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரிடமும் தேர்தல் கண்காணிப்பு குளுவினரிடமும் முறையீடு செய்துள்ளனர்.

இதே வேளை நேற்று மட்டு நகரில் அனுஸ்டிக்கப்பட்ட கர்த்தால் காரணமாக உணவு விடுதிகள் தேனீர் சாலைகள் என்பன மூடப்பட்டு இருந்தன என்பதும் குறிப்பிடத் தக்கது.

## திருமலை......

வதற்கு கோணேஸ்வரர் ஆலய வீதியை பயன்படுத்துமாறு படை யினர் உத்தரவிட்டுள்ளனர்.

இதேவேளை தேர்தலை பகிஸ்கரிக் குமாறு கோரி தமிழீழ மக்கள் கட்சி எனும் அமைப்பு நகரின் பல பகுதிகளிலும் சுவரொட்டிகளை ஓட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## நாடகப்பட்டறை

(வடமராட்சி நிருபர்)

யாழ் பலாலி ஆசிரியர் கலா சாலையில் எதிர்வரும் 12ம் திகதி வியாழக்கிழமை நாடகப்பட் டறை நடைபெறவுள்ளது.

நாடக இயக்குனர் குழந்தை சண்முகலிங்கம் தலைமையில் நடை பெறவுள்ளது.

## புலிகளு.............

வளங்கி உள்ளார்கள் இதே போன்று முழங்காவில் , ஜெயபுரம் , வட்டகச்சி பிரதேச மக்களும் ரத்ததானம் வளங்கியுள்ளதுடன் உலர் உணவுப் பொருட்கள் , குளிர்பானங்கள் , சமைத்த உணவுகள் என்பவற்றையும் தொடர்ச்சியாக வளங்கிவருகின்றார்கள் என செய்திகள் தெரிவிக்கின்றன.

## கட்சி மோதலில் இருவர் பலி !

(கண்டி)

கண்டி உணஸ்கிரிய பகுதியில் நேற்று மாலை கட்சி ஆரதவாளர் களுக்கிடையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

ஐக்கிய தேசியக்கட்சி பொ.ஐ. முன்னணி ஆதரவாளர்களுக் கிடையில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்கள் பொ.ஐ. முன்னணி ஆதரவாளர்கள் என உடுதும்பற பொலிஸ் பொறுப் பதிகாரி அமரசிங்க தெரிவித்தார்.

## மக்கள......

போன்ற பணிகளுக்கு ஹெலி கொப்டர் பயன்படுத்தப்பட விருப்ப தாக தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளர்.

மங்கள கமவில் இரண்டு வாக்கெடுப்பு நிலையங்களும் சின்னவத்தையில் ஒரு வாக்கெடுப்பு நிலையமும் அமைக்கப்படவுள்ளன.





பொதுஜன ஐக்கிய முன்னணி

மட்டக்களப்பு மாவட்டத்தில் பூரண அபிவிருத்திக்கு
பொதுஜன ஐக்கிய முன்னணியின்
முதன்மை வேட்பாளர்
கே. எஸ் கணேசமூர்த்தி அவர்களுக்கு
வாக்களிப்போம் !


## தேர்தல் கண்காணிப்பு

தேர்தல் தொடர்பான முறையீடுகளை தேர்தல் கண்காணிப்புக் குழுவிடம் பின்வரும் இடங்களில் நேரடியாகவும் தொலைபேசி மூலமும் தெரிவிக்கலாம்.

| | |
|---|---|
| YMCA மட்டக்களப்பு | 22495 / 25568 |
| YMCA கல்லாறு | 067 - 29084 |
| தடாகம் கோரைகல்லிமடு | 57586 |
| சர்வோதயம் , மட்டக்களப்பு | 25292 |
| சர்வோதயம் , களுவாஞ்சிக்குடி ( மின்சாரசபை எதிரே ) | |
| சர்வோதயம் , வாழைச்சேனை (புகையிரத நிலையம் அருகே ) | |

மட்டக்களப்பு மாவட்ட
தேர்தல் கண்காணிப்புக் குழு





வீணை
ஈ.பி.டி.பி

எப்போதும் உங்களுடன்
வாழும் துணிவு!
சமாதான சுகவாழ்வை
சாத்தியமாக்கும் வேட்கை
வீணைக்கே வாக்களிப்போம்!


இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிக்கேஷன் நிறுவனத்தினரால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியீடப்பட்டது.